புதுக்கோட்டை – பிரகதாம்பாள் கோயில் உள்பட

‘திராவிட மாடல்’ ஆட்சியில் 4000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு!

சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, அக்.17-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (16.10.2025) வினா விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு,புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் பி.ஐயப்பன், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் எ.நல்லதம்பி ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

வை.முத்துராஜா: புதுக்கோட்டை தொகுதியில் உள்ள ஸ்ரீபிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஸ்வரர்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: புதுக்கோட்டை மாவட்டம் பிரகதாம்பாள் திருக்கோயிலுக்கு ரூபாய் 46 லட்சம் செலவில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திருக்கோயில் குடமுழுக்கிற்கு 26.01.2026 அன்று நாள் குறிக்கப்பட்டிருக்கின்றது. அன்றைய தினத்தோடு இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 4,000 திருக்கோயில்களின் குடமுழுக்கு நிறைவுபெறும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

வை.முத்துராஜா: புதுக்கோட்டை பிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஸ்வரர் திருக்கோயிலின் திருப்பணிகளுக்கு ரூபாய் 46 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இத்திருக்கோயிலானது காசி விஸ்வநாதர் ஆலயத்தின் தீர்த்தத்திற்கு நிகரான புனிதத்தை கொண்டதும், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சியாமா சாஸ்திரி அவர்கள் வந்து பாடிய ஆலயம் என்ற சிறப்பினையும் கொண்டது. புதுக்கோட்டை பெரிய கோயில் என்ற பெருமைக்குரிய பிரகதாம்பாள் கோயிலுக்கு போதிய உபயதாரர்கள் இல்லாத காரணத்தினால் குடமுழுக்கு நடத்த காலதாமதம் ஆகிறது. ஆகவே அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து விரைந்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா என்பதை தாங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த திருக்கோயிலின் திருப்பணியானது திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் நிதியைக் கொண்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மாத இறுதிக்குள் அந்த பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்து விரைவுபடுத்தி எவ்வளவு விரைவாக குடமுழுக்கு நடத்தப்பட வேண்டுமோ அவ்வளவு விரைவாக குடமுழுக்கு நடத்தப்படுவதற்கு உண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

வை.முத்துராஜா: புதுக்கோட்டை மாநகராட்சி கீழமூன்றாம் வீதி நகரமையப்பகுதியில் அருள்பாலித்து வரும் வரதராஜ பெருமாள் திருக்கோயில் திருப்பணிகள் தொடங்கி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. திருப்பணிகள் தொய்வின்றி விரைவாக நடைபெற அறநிலையத்துறை சார்பாக கூடுதல் நிதி ஒதுக்கிடவும், புதுக்கோட்டை மாநகராட்சி பல்லவன் குளம் அருகில் அமைந்துள்ள வேதநாயகம் உடனுறை சாந்தநாத சுவாமி திருக்கோயில் பருவமழை காலத்தில் குளம் நிரம்பி கோயிலுக்குள் மழை நீர் சென்று விடுகிறது. பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகவே அமைச்சர் அவர்கள் பல்லவன் குளத்தை தூர்வாரி மழைநீர் வடிகால்களை சரி செய்து மறுசீரமைப்பு செய்து தருமாறு பேரவை தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரிய வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் ஒரு கோடி 46 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதோடு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த தெப்பக்குளமானது மாசிமகத்திற்கு மாத்திரம் இந்து சமய அறநிலையத் துறை எடுத்துக் கொள்கிறது. மற்ற நேரங்களில் அந்த குளத்தைப் பொறுத்தளவில் மாநகராட்சி தான் பராமரிக்கின்றது. குளத்திற்கு தண்ணீர் வருகின்ற பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் நிறைந்திருக்கின்றன. ஆகவே மாநகராட்சியும் மாவட்ட நிர்வாகமும் இந்து சமய அறநிலைத்துறையும் ஒருங்கிணைந்து இந்த தீபாவளிக்கு பிறகு ஆய்வுக் கூட்டத்தை நடத்தி நிரந்தர தீர்வு காணப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த மாசிமகம் தெப்பம் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் இந்து சமய அறநிலைத்துறை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.ஐயப்பன்: உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், விக்ரமங்கலம், வி.கோவில்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமையான மருதப்ப சுவாமி திருக்கோயில் உள்ளது. அந்த திருக்கோயிலுக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் குடமுழுக்கு தேதி அறிவிக்கப்பட்டது ஆனால் திருப்பணி வேலைகள் இன்றைய தேதி வரை முடியவில்லை. குடமுழுக்கு எப்போது நடைபெறும் என்பதை பேரவை தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திருக்கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயிலாகும். அந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டு 50 ஆண்டுகளுக்கு மேலாகிறது. திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாத்திட 425 கோடி ரூபாய் அரசு நிதி பெற்று, திருப்பணிகளுக்கு எடுத்துக் கொண்ட காரணத்தினால் தான் அந்த திருக்கோயிலில் திருப்பணிகளை தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிச்சயமாக அத்திருப்பணிகள் அனைத்தும் கருங்கல்லினால் நடைபெறுகின்ற பணி என்பதால் சற்று காலதாமதம் ஏற்பட்டு இருக்கின்றது. வருகின்ற தை மாதத்திலேயே அந்த திருப்பணிகள் முடிவுற்று குடமுழுக்கு நடத்துவதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைளும் விரைவாக மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எ.நல்லதம்பி: முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, திராவிட மாடல் ஆட்சியில் பல ஆயிரக்கணக்கான திருக்கோயில்களில் திருப்பணிகள் குடமுழுக்குகள் செய்த அரசு, எனது திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் பசலிகுட்டை முருகன் திருக்கோயில் பழமையான கோயில். அந்த திருக்கோயிலினை திருப்பணி செய்ய அமைச்சர் அவர்கள் கடந்த கூட்டத்தொடரில் அறிவித்தார்கள். எனவே அரசு நிதியும், உபயதாரர்கள் நிதியையும் பெற்று உடனடியாக திருப்பணி செய்ய முன் வருவாரா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: தமிழ் கடவுள் முருக பெருமானின் பெருமைக்கு பெருமை சேர்க்கின்ற ஆட்சி இந்த ஆட்சி என்றால் அதற்கு மாறுபட்ட கருத்து எந்த நிலையில் இருந்தும் வர எழுவதற்கு உண்டான சூழல் இல்லை. உறுப்பினர் அவர்கள் கோரிய திருக்கோயிலைப் பொறுத்தளவில் 11 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினரும், மற்றவர்களும் இணைந்து ஏழு கோடி ரூபாய் அளவிற்கு உபயதாரர்கள் நிதி வழங்குவதற்கு ஒப்புதல் கடிதம் அளித்திருக்கின்றார்கள். தேவைப்படும் இதர நிதியினை ஆணையர் பொது நல நிதியிலிருந்து வழங்கிட பரிந்துரை வந்திருக்கின்றது. ஆகவே வெகுவிரைவாக அதற்கு ஒப்புதல் அளித்து, நேரடியாக களத்திற்கு சென்று ஆய்வு செய்து பணிகளை விரைவுப்படுத்தி திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தி தரப்படும் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ திடீர் ஆய்வு மேற்கொண்டார் உடன் ஜி.ரவீந்திரா, டி.ஆர்.கே.பாபு, என்.கே.கிருஷ்ணன், ஓ.ஏ.நாகலிங்கம், இ.கே.உதயசூரியன், டி.எம். சுகுமார், சஞ்சய், உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் மருத்துவர்கள் செவிலியர்கள் உள்பட பலர் உள்ளனர்.

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடத்தில்

புதிய தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம்!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

அரியலூர், அக். 17 -

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிய தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராம சாலைகளை மேம்படுத்துதல், துணை சுகாதார நிலையங்கள் அமைத்தல், மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல், பள்ளி வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், கதிரடிக்கும் களம் அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், ஏரிகள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி அரியலூர் மாவட்டம், ஆண்டிடம் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் புதிய தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் திறந்து வைத்து, குத்து விளக்கேற்றி தீயணைப்பு துறை வாகனத்தின் செயல் பாட்டினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

ஆண்டிமடம் தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை திறந்து வைத்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது. இப்பகுதியில் அதிகளவில் தீ விபத்து ஏற்படுகின்ற சூழல் இருந்தது அதை தடுப்பதற்கும், அதற்கான தீர்வுகளுக்கு கோரிக்கை தொடர்ந்து வைக்கப்பட்டிருந்தது. அரியலூர் மாவட்டம் அதிகமான குடி சைப் பகுதிகள் உள்ள மாவட்டமாகும். இதனை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள திருமானூர் மற்றும் ஆண்டிமடம் பகுதிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனி அறிவிப்பாக தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தினை வழங்கியிருக்கிறார்கள். குன்னத்தில் பணிமனை துவங்குகின்ற வாய்ப்பை சலம் ஜெயங்கொண்டம் வழங்கியிருக்கிறார்கள். மேலும் ஜெயங்கொண்டத்தில் புதிய மின்வாரிய கோட்ட அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. வரும் மாதத்தில் குன்னத்திலும் திறக்கப்படவுள்ளது. செந்துறையில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று துணை மின் நிலையம் அமைக்கப்படவுள்ளது. அதேபோன்று அரியலூர் மாவட்டத்தில் பிலாக்குறிச்சி, சிலால், தண்டலை மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் கொளக்காநத்தம் ஆகிய நான்கு இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க இன்றைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிந்து ஜெயங்கொண்டம் சிப்காட் தொழிற்பேட்டை புதிய காலணி தொழிற் சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியுள்ளார்கள். அது சுற்றுச்சூழல் அனுமதிக்காக உள்ளது. அனுமதி கிடைத்தவுடன் பணிகள் துவங்கப்படும்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் தான் விருத்தாசலம் ஜெயங்கொண்டம் சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது. 2006 - 2011 ஆம் ஆண்டுகளில் முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது நான் சட்டமன்றத்தில் இந்த பாலத்தின் அவசியம் குறித்து பேசினேன். தலைவர் கலைஞர் அவர்கள் மதனத்தூர் நீலத்தநல்லூர் அமைக்க உத்தரவிட்டார்கள்.

இந்த பாலம் தஞ்சை மாவட்டத்தையும் அரியலூர் மாவட்டத்தினையும் இணைக்கும் வகையில் இருக்கிறது இன்று அச்சாலைகள் அகலப்படுத்தப்பட்டதால் அப்பகுதி வணிக சாலையாகவே மாறும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்திற்கு எடுக்கப்பட்ட 8000 ஏக்கர் நிலப்பரப்பு திரும்ப வழங்கப்பட்டுள்ளது. இது இந்தியாவில் எந்தவொரு முதலமைச்சரும் செய்யாத சாதனையாகும்.

இத்திட்டத்திற்காக பெறப்பட்ட நிலத்திற்கு வழங்கபட்ட தொகையினை அரசுக்கு திரும்ப செலுத்த வேண்டாம் எனவும் தெரிவித்து, நிலம் வழங்கிய விவசாயி களுக்கு நிலத்தினை திரும்ப வழங்கும் வண்ணம் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியின் வளர்ச்சியினை முன்னேற்றும் வகையில் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்த்து, பார்த்து திட்டங்களை தந்துகொண்டு இருக்கிறார். இன்று இரண்டு தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது.

இதுதான் மக்களுக்கான திராவிட மாடல் அரசு என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். ஆ.ரா.சிவராமன், துணை இயக்குநர் மத்திய மண்டலம் திருச்சி முரளி, மாவட்ட அலுலவர் பெரம்பலூர் அரியலூர் ஒருங்கிணைந்த மாவட்டம் அனுசுயா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, உதவி மாவட்ட அலுவலர் பெரம்பலூர் வீரபாகு, நிலைய அலுவலர் செந்தில்குமார், தீயணைப்பு துறை அலுவலர்கள், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், ஆர்.செந்தில்குமார், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மாதவரம் வடக்கு பகுதி, பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 15–வது வட்ட பாக முகவர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள் கூட்டம் மணலி புதுநகர் கழக அலுவலகத்தில் வட்டச் செயலாளர் கே. அங்குசாமி ஏற்பாட்டில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு வாக்காளர் பட்டியல் சேர்த்தல், நீத்தல் மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். மாவட்ட, பகுதி,வட்டக் கழக நிர்வாகிகள், செயல் வீரர்கள் என பலர் கலந்து கொண்டார்கள்.

எழும்பூர் சட்டமன்ற தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி தலைமையில், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு எழும்பூர் சட்டமன்ற தொகுதி, மண்டலம் – 8 வார்டு – 99 உட்பட்ட அனைத்து சேவைதுறை அதிகாரிகள் ஒருங்கிணைப்பு மற்றும் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கண்ணீர் அஞ்சலி

கோவூர் கூட்டுறவு வங்கி முன்னாள் இயக்குனர்
குன்றத்தூர் பேரூராட்சி – தி.மு.க. 4 வது வார்டு முன்னாள் உறுப்பினர்

திரு. K.ரங்கன் (வயது : 84)

மறைவு : 16 - 10 - 2025

அவர்கள் இயற்கை எய்தினார்

என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (17 – 10 – 2025, வெள்ளிக்கிழமை, நண்பகல் 12 மணியளவில், எண்.33, பிள்ளையார் கோவில் தெரு, மணஞ்சேரி கிராமம், குன்றத்தூர், சென்னை – 600 069) அவர்களது இல்லத்தில் இருந்து புறப்படும்.

ஆழ்ந்த வருத்தத்துடன்...

R.ராஜி
16 – வது வார்டு நகர மன்ற உறுப்பினர்
குன்றத்தூர் நகராட்சி

R.ஜெகன்
16 – வது வட்டக் கழகச் செயலாளர்
குன்றத்தூர் நகர தி.மு.க.

R.சுரேஷ்
பில்டிங் கான்ட்ராக்டர்

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்